சுருக்கம்

“அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்” – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை– மகளிருக்கு பணியிடங்கள் மற்றும் பிற இடங்களுக்கு எளிதில் செல்ல இரு சக்கர வாகனங்கள் (Moped/Scooter) வாங்க 50 சதவீதம் மானியம் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ம.அதி.3) துறை

அரசாணை (நிலை) எண்.19 நாள் 20.2.2017

படிக்கப்பட்டவை:

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.2923/பி2/2016, நாள் 25.1.2017.

•••••

**ஆணை:**

தொலைநோக்கு பார்வை கொண்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள், பெண்கள் தங்களது பணியிடங்களுக்கு செல்வதில் உள்ள சிரமங்களை உணர்ந்து, இந்திய திருநாட்டிலேயே முதன்முறையாக, “மகளிர் பணியிடங்களுக்கும், பிற வேலைகளுக்கும் எளிதில் செல்லும் வகையில் இரு சக்கர வாகனங்கள் (Moped/ Scooter) வாங்க 50 சதவீத மானியம் வழங்கும்” ஒரு முன்னோடி திட்டத்தினை தேர்தல் வாக்குறுதியாக அறிவித்திருந்தார்.

2. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர், பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில், இன்றைய நவீன உலகத்தில் ஆண், பெண் இளையவர் மற்றும் முதியோர் என வயது வித்தியாசமின்றி அனைவரும் பணியிடங்களுக்கு செல்லவும், பிற இடங்களுக்கு செல்லவும் போக்குவரத்து சாதனங்கள் இன்றியமையாதனவாகும் என்றும், ஊரக மற்றும் நகர்ப்புற சாலை இணைப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள் ஆகியவற்றில் நாட்டின் பிற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னிலையில் உள்ளது என்றும், நாட்டிலேயே தரமான சாலை இணைப்பு வசதிகளைக் கொண்டுள்ள மாநிலமாக திகழும் தமிழ்நாடு பொதுப் போக்குவரத்து அமைப்பிலும் முதலிடம் பெற்றுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநர் முறைமாற்றுப்பணி (Shift), தொலைதூரப் பணியிடங்கள், போக்குவரத்து வசதி குறைந்த இடங்களில் அமைந்துள்ள நிறுவனங்கள், இரவு நேரப்பணிகள் போன்றவை, இரு சக்கர வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன என்றும், அரசு மற்றும் தனியார் வாகனங்களைக் காட்டிலும், தங்களது தனிப்பட்ட வாகனங்களில் பணியிடங்களுக்கும், பிற இடங்களுக்கும் செல்வதில் பெண்கள் ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார்.

4. எனவே, இத் தேர்தல் வாக்குறுதியான மகளிர் பணியிடங்களுக்கும், பிற இடங்களுக்கும் எளிதில் செல்ல இரு சக்கர வாகனம் வாங்க 50 சதவீத மான்யம் வழங்கும் திட்டத்தினை “அம்மா இரு சக்கர வாகனத் திட்டம்” என்ற பெயரில் செயல்படுத்தவும், 50